ஸ்ரீ

ஸ்ரீராதாருக்மணி ஸத்தியபாமா ஸமேத

ஸ்ரீ கிருஷ்ணாய பரப்ரம்மணே நம:

ஸீதா கல்யாணமென்னும்

ஸ்ரீ ஜானகி ஸ்வயம்வரக் கும்மி.

ஸ்ரீரங்கம்

ரங்கநாயகி அம்மாளால்

இயற்றப்பெற்று.

ஸ்ரீரங்கம்:

ஸ்ரீ வாணி விலாஸ் பிரஸில்

ஆறாவது பதிப்பு

பதிப்பிக்கப்பெற்றது.

1941.

காபிரைட் ரிஜிஸ்டர் செய்யப்பட்டது.

[விலை அணா 4

ஸ்ரீ

ஸ்ரீ ராதாருக்மணி ஸத்தியபாமா ஸமேத
ஸ்ரீ கிருஷ்ணாய பரப்ரம்மணே நம:

ஸீதா கல்யாணமென்னும்

ஸ்ரீ ஜானகி ஸ்வயம்வர கும்மி.

ஸ்ரீரங்கம்
ரங்கநாயகி அம்மாளால்
இயற்றப்பட்டது.

ஸ்ரீரங்கம்:
ஸ்ரீ வாணீ விலாஸ் பிரஸில்
ஆறாவது பதிப்பு
பதிப்பிக்கப்பெற்றது.
1941.

காபி ரைட் ரிஜிஸ்டர் செய்யப்பட்டது. [விலை அணா 4

உ

ஸ்ரீஸீதா லக்ஷ்மண பரதசத்ருக்ன ஹனுமத் ஸமேத
ஸ்ரீரகுநந்தன பரப்பிரும்மணே நம:

ராகம், பலபீமா மெட்டு.

பல்லவி

வருவாயே, அருள்வாயே.

அநுபல்லவி.

வாணி ஸரஸ்வதி தேவியென் வாக்கினில் வரு

1. திருமகள் ஸீதை திருமணம் பாட
திருவரங் கேசன் திருவடி பணிந்தேன் வரு

2. கண்மணி ஜனகன் பெண்மணி ஸீதை
கல்யாண மிதனைக் களிப்புடன்பாட வரு

3. அருமைநிறையுமென் ஆசா ரியர்திரு
அடிமலர் தொழுதேன் அன்புடன் நாவில் வரு

4. அஞ்சனை தனயன் அலைகடல் தாண்டிய
அனுமா னருளால் நினைவினில் நீயே வரு

1-வது கட்டம்.

ஸீதையின் திருவவதாரம்.

ராகம்-மாயா காளி மெட்டு

பல்லவி,

மாநிலம் புகழ்ந்திடும் மிதிலாபுரநகர்
மஹாராஜன் ஜனகன்

அநுபல்லவி,

ஆனந்தமாயொரு யாகமும் செய்திட ஆலோசனைபுரிந்தார் மா

சரணங்கள்

1. மங்களமான முகூர்த்தமதில் உயர் மாமறையவருடனே
தங்கக்கலப்பையால் தயவுடன் மகிழ்வாய் தரணியையுழுதவர்தார் மா
2. பொன்கலப்பைமுனையில் பெட்டி தடுக்கவே பூரித்து மேயெடுத்தார்
என்னிதவென்றுர் திறந்தவர் பார்த்தார் இளஞ்சிறு குழந்தைகண்டார்
[மா

3. பார்த்தார் மகிழ்வாய் பாலையின்வடிவை பக்ஷமுடன் யெடுத்தார்
சேர்த்தார்மார்பினில்செல்வக்கண்மணியைசித்தமகிழ்ந்துரைத்தார் மா
4. பார்கடலமுதோ பங்கயம்வளரும் பத்மாலயனிதானோ
போக்கவே யென்கலி தீர்க்கவே திருமகள் பெண்ணுயுதித்தாளென்றார்
மா

2-வது கட்டம்.

ராகம்-ராமன் தூதனை மெட்டு

பல்லவி

அருமைக்குழந்தையென்று எண்ணினார் மஹா
ராஜன் ஜனகன் துதி பண்ணினார் அரு

அனுபல்லவி

அரண்மனைதனில் வந்து பெருமையுடன் மகிழ்ந்து
தருமபத்தினியிடம் தந்துமிகப்புகழ்ந்து அரு

சரணங்கள்

1. கோதானம் பூதானஞ் செய்திட்டார் வெகு
கோலாகலத்துடன் தொட்டிலிட்டார்
ஸீதாதேவியென்று செல்வப்பெயருமிட்டு
சித்தங்களித்துகந்து உத்தமர் ஜனகரும் அரு

2. பின்னும் ஜனகருக்கோர் பெண்மணிவந்து
பிறந்தனள் ஊர்மிளைக் கண்மணி
மன்னன் ஜனகருக்குத் தம்பி குஜத்வஜர்க்கு
மாண்டவிசிருதகீர்த்தி மகளிருவருதிக்க அரு

3-வது கட்டம்

ராகம்-மாரனே வருவாய் மெட்டு

தவிழ்ந்தனள் ஸீதை

அனுபல்லவி

தந்தை ஜனகர் சிந்தைமகிழ தங்கமேனியொளிகள் திகழத் த

சரணங்கள்

1. கவிழ்ந்த கூந்தலசையவே யிருகண்ணிணைகள் மிறளவே
காரைகண்டிஹாரமுடனே கங்கணவொலி மின்னவேமிகத் த
2 தண்டைபாதஸரமொலிக்கத் தளர்நடை நடந்தனள்
தங்கையருடன் கூடியே விளையாடி பெங்குமோடியழகாய் த

4-வது கட்டம்

ராகம்-ஆவோஜுபாவேர் மெட்டு

பல்லவி

மஹா ராஜா திராஜன் பெற்ற ஸீதே
பூமிதன்னில் உதித்த மலர் மாதே

சரணங்கள்

1. வர்ணபீதாம்பரமுடுத்து வாரணித்து மைதிலி அதி
சின்னஞ்சிறியதொரு கண்மணி யிளங்
கன்னிகைப் பருவநல் பெண்மணி மஹா

2. கோடி சூர்யக் காந்திமின்ன கோமளாங்கி ஜானகி
கூடி ஸகிகளுடன் நின்றனள் வெகு
மேடிபதாகவே புகன்றனள் மஹா

5-வது கட்டம்

லங்கபங்ககாலோடா மெட்டு

மாலையிலே பூஞ்சோலையிலே நாம்
மாமலர் கொய்வோம் வாராய்

மாமலர்கொய்வோம் வாராய் பூமலர்ச்சோலை பாராய்
மங்கையூர்மிளா தங்கைமாண்டவி கங்கை ஸ்ரீதகிர்த்திகோராய்

சரணங்கள்

1. அடி சேலையொத்தவிழியாளே பசும்பாலையொத்த மொழியாளே
செண்பகம்பாதிரி புன்னைமல்லிகை செங்கழுநீருடன் ரோஜா மா

2. அடியன்னமெத்த நடையாளே கொடி மின்னலொத்த யிடையாளே
அரளிபிச்சி மருகொன்னைவேர் தவனம் மழகிய பன்னீர்ஜாதி மா

6-வது கட்டம்

ராகம்- காகஷிகேண்கா கஷியே மெட்டு

பல்லவி

ஆடுவோம் பந்தாடுவோம் சிங்காரமண்டபத்தில் ஆடு

அநுபல்லவி

ஆடிவிளையாடி மிகப்பாடியே கொண்டாடியே பா ஊடு

சரணம்

1 பளிங்குமண்டபந்தனில் பாங்கியர்களே நாடி
பரமசிவன் தனுஸின் பக்கமதில் ஒன்றுகூடி
பார்த்திபன் எனதய்யர் பார்த்திருக்கின்றார் வாடி
பாலெடுத்து மிக வடிப்போம் நாமும்
பாங்குடனே கையில் பிடிப்போம்
பந்தயம்வைத்து நன்றாயெடுப்போம்
பந்தயம் என் தந்தையின்முன் விந்தையுடன் வைத்து விளை ஆடு

7-வது கட்டம்

பப்பள பளபள மெட்டு

1. சலசலவென்று பாதஸரத்தின் சத்தங்கேட்கவே ஸ்ரீ
ஜானகியும் ஸகியுடனே செண்டடித்தாளே

2. பளபளவென்ற பதக்கஹார ஜோதி மின்னவே
பாங்கியுடன் ஸீதைபாடிப் பந்தடித்தாளே.

3. ஓடியோடி மண்டபமெங்கு மோட்டம் பிடித்தவள்
கூடியொன்றாத் தங்கையுடன் செண்டடித்தாளே

4. விருவிருவென்று சுத்திச்சுழன்று பந்தடிக்கவே
விழுந்துபந்து சிவதனுஸில் போயொளிக்கவே

8-வது கட்டம்

கள்ளக்கிருஷ்ணன் மெட்டு

1. பாங்கியரே வேகமோடி பந்தினை நீ சென்று தேடி
பரமன் வில்லினைத்தூக்கி பார்த்தெடுத்து வாபோடி

2. ஸீதை சொல்லைக்கேட்டு ஓடி சிவதனுஸண்டை தேடி
செண்டைக்காணோமென்றுரைத்தாள் சேடியர்கள் ஒன்றுகூடி

3. சீக்கிரமாய்ச்சென்று ஸீதை சிவதனுஸை யப்போதே
தூக்கியிடக்கையினாலே தூயபந்தையெடுத்தாளே

4. ஜானகியும் வில்லைத்தூக்க ஜனகராஜனும் பார்க்க
ஏனிதென்ன அற்புதமோ என்று ஸபைதனில் சொல்லுவார்.

9-வது கட்டம்

அம்மாவுனுக்கிதுவும் மெட்டு

பல்லவி

மஹாராஜன் ஸபைதனிலே சொல்வார்
மாணிக்கமண்டபத்தில் மந்திரிமார் முன்பினிலே

சரணங்கள்

1 அருபதினுயிரவர் வந்து அசைக்கமுடியாத வில்லை
இடதுகையால் தூக்கிப் பந்தை யெடுத்தனளேஸீதை யென்று ம
2 கண்மணி யென் ஜானகிக்கு கணவனுக வந்திடுவோர்
உண்மையுள்ள பலசாலி உத்தமராய் வேண்டுமென்று ம
3 பந்தயமாய் வைத்துவிட்டேன் பரமசிவன் வில்லிதை யாண்
வந்தெடுத்து வளைத்தவர்க்கே தந்திடுவேன் பெண்ணை யென்று ம
4 கல்யாணப் பத்திரிகை காக்ஷியுடன் அச்சடித்து
எல்லா தேசங்களுக்கும் இப்பொழுது அனுப்புமென்று ம

10-வது கட்டம்

ஸ்ரீ ஸீதாஸ்வயம்வரப் பத்திரிகை யனுப்புதல்

ராகம்-நலங்கிரோள் மெட்டு

பல்லவி

மன்னன் ஜனகன் சொல் கேட்டேனே யவர்
மந்திரிகள் மன மகிழ்ந்தார்

அனுபல்லவி

கன்னிகை ஸீதைக்கு கல்யாணமென்றவர்
காதலுடன் மிகப் புகழ்ந்தார் மன்ன

சரணங்கள்

1 கல்யாணபேரிகை கொட்டி நகரெங்கும்
காக்ஷியுட னலங்கரித்தார்
நல்லவேளை தனில் திருமணவோலை
நன்ருக எழுதி முடித்தார் மன்ன

2 வில்லைமுறித்திடும் வல்லவருக்கெங்கள்
வேந்தன் ஜனகன் தன் பெண்ணை
கல்யாணஞ்செய்து தருவோமென்றதி
காதலோடெழுதி முன்னே மன்ன

3 தேசதேசமுள்ள ராஜராஜர்க்கெல்லாம்
திட்டமோடனுப்பி ரூரே
பூசுரர் கோசிகர் ராஜ ரிஷிகளுக்கு
புகழ்ந்தனுப்பியே நேரே மன்ன

11-வது கட்டம்

தேச தேசர் ராஜர்கள் வருவது
ராகம்-அருமையுள்ள காதலியே மெட்டு

பல்லவி

தேசாதிதேசமுள்ள ராஜாதிராஜர் வந்தார்
ஆசையுடன் மிதிலைமஹாராஜன் மணிமண்டபத்தில் தே

சரணங்கள்

1 அங்க வங்க கலிங்கர்களும் கொங்கர் கொச்சி குடகினரும்
மங்கை ஸீதை சுயம்வரத்தை மகிழ்வுடனே பார்க்கவெண்ணி தே
2 தொல்லுலகிலுள்ளவர்கள் எல்லவருங் கூடிக்கொண்டு
கல்யாணி ஜானகியைக் கல்யாணஞ் செய்யவெண்ணி தே
3 மந்தரத்தை யானெடுப்பேன் பந்தினைப்போ லாடிநிற்பேன்
இந்தசிவ தனுஸெனக்கு யெந்தமூலை காணுமென்று தே
4 உத்தமராஞ் ஜெனகருக்குப் புத்திகொஞ்சம் காணுமென்றார்
சொத்தைவில்லைவளைப்பதற்கு எத்தனைபேர் வேணுமென்றுதே

12-வது கட்டம்

ஸ்ரீராமன் விச்வாமித்திரர் யாகத்தை காப்பது
ராகம்-சூரியன் மறையுமுன்னே மெட்டு

பல்லவி

திருவயோத்தி நகரமாளும் தசரதேந்திரன்
தேவி கௌஸல்யை குமாரன் ராமச்சந்திரன் திரு

சரணங்கள்

1 அருந்தவமுனி கோசிகர்வந்து அழைத்திட மகிழ்ந்தார்
அந்தரங்கத்தம்பியுடனே அடவியில் நடந்தார் திரு
2 மூடையான தாடகியுயிர் முடியமாய்த்திட்டார்
கூடச்சென்று கோசிகமுனி வேள்விகாத்திட்டார் திரு
3 பாதகன் சுவாகுவினுட பிராணனை மடித்தார்
காதகன் மாரிசனைக்கொண்டு கடலினில் ஒளித்தார் திரு

13-வது கட்டம்

ஸ்ரீவிச்வாமித்ரர்க்கு ஸீதை திருமணப்பத்திரிகை வருதல்.

ராகம்-கைம்மான மெட்டு

1 குவலயத்தோர் கொண்டாடும் கோதண்டராகவனும்
தவமுனிவர் வேள்விதனைத் தம்பியுடன் காத்துகந்து

2 வீரரகுராமச்சந்திரன் விச்வாமித்ரர் ஆச்ரமத்தில்
ஸாரமுள கதைகேட்டு ஸந்தோஷத்துடனிருக்கையிலே

3 உத்தமராம் ஜனகமன்னன் புத்திரி திருமண வைபவத்தின்
பத்திரிகை தன்னையப்போ பாங்குடன் தூதர்கள் கொண்டுவர

4 கண்டுடனே கௌசிகரும் களிப்புடனே யதியானந்தமாய்
கொண்டுவந்து ராகவன்முன் கோலாகலமாய்ச் சொல்லுகின்றார்

14-வது கட்டம்

விச்வாமித்திரர் ஸ்ரீராகவனிடம் சொல்வது.

ராகம்-வந்தனந்தந்தேன் மெட்டு

பல்லவி

ராமச்சந்திரா கேளும் சியாமளசுந்திரா

சரணங்கள்

1 பூமிபுகழு மிதிலை நகர பூபதி ஜனகேந்திரன்
புத்திரி கல்யாணப் பத்திரிகை பாருமே ஸ்ரீராம

2 சிவதனுசை வளைத்தவர்க்கே ஸீதையென்னும் பெண்ணையே
மகிழ்வுடன் ஜனகரும் திருமணமதுசெய்து தருகிறார் ஸ்ரீராம

3 வேகமாக முனிவருடனே போகவேணுங்காணுமே
ராகவா தம்பியுடனே நீரும் வருகவேணுமே ஸ்ரீராம

4 விச்வாமித்திர முனிவர் சொல்லை வீரராமன் கேட்டுடன்
இச்சையாய் மிதிலை நகரம் ரிஷிகளுடன் வந்திட்டார் ஸ்ரீராம

15-வது கட்டம்.

விச்வாமித்ரர் ஸ்ரீராமலக்ஷ்மணருடன் மிதிலா நகரம் வருவது.

ராகம்-ஆனந்த பைரவி

பல்லவி

மிதிலைநகர் நாடி வந்தாரே ஸ்ரீராமச்சந்திரன்
மாமுனிவரைக் கூடிவந்தாரே.

அநுபல்லவி

1 மதிமகிழ்ந்து விச்வாமித்ர மாமுனிவர் பின்தொடர்ந்து
அதிமகிழ்வாய்த்தம்பியுடன் ஆனந்தமாய் வழிநடந்து மிதி

2 கல்லைப்பெண்ணுய்ச்செய்துகந்து கௌதமர்தன்பூஜைகொண்டு
வில்லைப்பார்க்க மனதிலெண்ணிவேந்தன் ஜனகன் பட்டணமாம் மிதி

3 கோசிகரும் ரிஷிகளுடன் கூட்டமதாய் வந்திடவே
ஆசையுடனுபசரித்து ராஜன் ஜனகரெதிரழைக்க மிதி

4 அவரவர்க்குத்தகுந்தபடி அன்புடனே பூஜைசெய்து
கௌரவமாய் ஜனகமன்னன் கௌசிகர்முன் சொல்லுகின்ருர் மிதி

16-வது கட்டம்

ஜனகராஜன் ஸ்ரீராமர் லக்ஷ்மணர்களை யாரென்று
விச்வாமித்ரரிடம் வினவுதல்

ராகம்-பில்சிதே மதுரமூரா மேட்டு.

பல்லவி

ராஜகுமாரரிவர் ஆரையா
கோசிகரே புகல்வீர்

சரணங்கள்

1 ஆசையுடயயெனக் கறிந்திடச் சொல்லுவீர்
அழகிளஞ் சிறுகுமரர் இருவர்கள் ராஜ

2 சியாமள காத்திரர் ஸாரஸநேத்திரர்
க்ஷத்திரிய குலதிலகர் இருவர்கள் ராஜ

3 விமலகெம்பீரர் வெகுஸுகுமாரர்
வீரர்கள் புகழ்தீரர் இருவர்கள் ராஜ

4 சிவதனுவெடுப்பரோ ஸீதை கைப்பிடிப்பரோ
புவனசுந்திரரூபர் இருவர்கள் ராஜ

17-வது கட்டம்

ஸ்ரீஜனகராஜருக்கு ஸ்ரீராமலக்ஷ்மணர் வரலாறு கூறல்

ராகம்-மறையோரே மேட்டு

பல்லவி

ரகுவம்சகுலதிலகன் ராஜன் தசரத தவபாலன் ரகு

அநுபல்லவி,

புகழ்மிருந்த கௌசல்யா புத்திரனிவன் ஸ்ரீ ராமச்சந்திரன்—ரகு

சரணங்கள்

1 பூமிபுகழ் தசரதற்கு புத்திரர் நால்வர் தனில் மூத்தோன்
ராமனுக்கு இளையதம்பி லக்ஷ்மணனிவன் வெகுகுணசீலன்—ரகு

2 அசுரர்பயம்நீங்கியேயான் யாகமும்செய்திடமன திலெண்ணி
அயோத்திசென்று தசரதனை அன்புடன் வேண்டியேகூட்டி
வந்தேன்—ரகு

3 தம்பியோடென்பின் வந்தான் தாடகிசுவாகுதனைமடித்தான்
அன்புடன் வேள்வியைக்காத்தான் அகலியின் சாபத்தை
தீர்த்துகந்தான்—ரகு

4 சுந்தரி ஸீதை கல்யாண சுயம்வரமண்டபநாடி வந்தாள்
வந்திருக்கோம் இவர்களுடன் வரவழையும் சிவதனுஸை
யென்றார்—ரகு

18-வது கட்டம்

ஸ்ரீ ஜனகராஜன் சிவதனுஸை ஸபையில் வரவழைப்பது.

ராகம்-ராஜனே:கேளுமையா மெட்டு

பல்லவி

மன்னன் ஜனகன் மகிழ்ந்தார் சுயம்வர
மண்டபத்திலனைவரையு மழைத்துகந்தார் மன்

சரணங்கள்

1 பொன்னின் மணியாசனத்தில் ராஜர்களைப்
புகழ்ந்து உபசரித்து யிருக்கச்செய்தார்
மன்னுபுகழ் சிவதனுஸை வளைக்கவர்க்கே
மகள் ஸீதையைத் தருவேனென்றுரைத்தார் மன்

2 சிவதனுஸினைப் பலபேர் கிங்கிலியர்
சேர்ந்து சபைதனிலே யிழுத்துவைத்தார்
புவனிமுழுதும் வஸிக்கும் வெகுஜனங்கள்
பூரித்து மண்டபத்தில் வந்துநிறைந்தார் மன்

3 மாமுனிவர் பலர்சூழ விச்வாமித்ரர்
மகிழ்ந்து ஸ்ரீராகவன் லக்ஷ்மணருடன்
க்ஷேமமுடன் ஸபையில் வந்தார் ஜனகரும்
நேசமுடனுபசரித் தழைத்துகந்தார் மன்

4 கோடி சூர்யனுதித்தாப்போல் ஸபையில்
கோதண்டராமனுப் வீற்றிருக்கக்
கண்டாளொரு தோழி ஓடியே
களிப்புடன் ஸீதைமுன் வந்துரைத்தாள்

19-வது கட்டம்

ஸ்ரீராமலக்ஷ்மணர் அழகைக்கண்டு ஸீதாதேவியிடம்

ஸகி சொல்லுதல்

ராகம்-புள்ளிக்கலாபமயில் காவடிச்சிந்து மெட்டு

1 அரசன் ஜனகன் பெற்ற பெண்ணே எங்கள்
அன்புள்ள ஜானகிக் கண்ணே அதி
அற்புதவடி வழகர் அருந்தவ முனிவர் பின்
பாராய் வந்து நேராய்

2 மன்னவன் தசரத குமாரர் யிந்த
மண்டலம் புகழும் தனிவீரர் மேல்
மாடியின்மேல் ஜன்னலிலே வாடிசென்று பார்த்திடுவோம்
மாதே எங்கள் ஸீதே

3 தாதிசொல்லைக் கேட்டுடன் மகிழ்ந்தாள் ஸீதை
தங்கையர்கள் தன்னுடனெழுந்தாள் அந்த
மாதரசி ஜானகியும் மாடியின்மேல் வந்து நின்று
பார்த்தாள் மனம் வேர்த்தாள்

4 அந்தரங்கத் தோழியர்கள் கூடி சீதை
அருகினில் நின்றுமே கொண்டாடி இங்கு
வந்திருக்கும் மன்னரிலுன் சிந்தையிற்கிசைந்தவரைப்
பாராய் பதில் கூறாய்.

20-வது கட்டம்

தோழிகள் ஸபையில்வந்திருக்கும் ராஜர்களை ஸீதைக்குறைக்க ஸீதை பதில் சொல்வது.

ராகம்-ஆ ஆ இது என்ன மெட்டு

1. பாராய் நமக்கெதிர் ஜோராயிருப்பவர் பாண்டியமஹாராஜன்
பல்லுவிழுந்த சொல்லுமிழந்தோன் மெல்லுவாயன் போ போடி
2. படைசிங்காரன பைட்யாதேக்கோ பஞ்சாப் மஹாராஜீ வீதா
அமாரி மர்க்கட ஸமானரூபி தும்கி கியாபோல் சல் சல் ஜாவ்
3. ஜோடியாய்சால்வை போர்த்தியிருப்போன் சோழமஹாராஜன் வீதா
தாடிவெளுத்து தலையும் நிறைந்தோன் தள்ளாதகிழவன் போபோடி
4. உக்குரகொங்கண கோடியித்தாரே அங்காராஜனவனு வீதா
அங்கரவரிகே கண்களொந்துபூ வாகியதெ கோடே ஸயொ
5. மிசதோனுசைய் பெட்டியுன்னுடே காசிராஜனதடு வீதா
காசிவானிகி சைலொக பொண்டி ருசகோபோ போவேசெலியா
6. மாமுனிகோசிகர் பக்கமதில்பார் மரகதவண்ணன் ஹே ஸீதா
சாமளவண்ணன் தாமரைக்கண்ணன் ஸரியோசொல்வாய் நீ வீதா
7. தாசரதி ஸ்ரீராமனைப்பார்ப்பதுடன் தலைகுனிந்தேமகிழ்வாய் வீதா
நேசமிகுந்த ஸகியவள் தன்முன் ஆசையுடன் சொல்வாள் வீதா

21-வது கட்டம்.

ஸ்ரீஜானகி ஸ்ரீராகவன் வடிவைக்கண்டு தோழியிடம் சொல்வது

ராகம்-ஜப்பான் ஜிண்டான் மெட்டு

பல்லவி

என்ன செய்வேன் ஸகியிவர் தனுவைப்படி வளைப்பாரடி

சரணங்கள்

1 ஆனாலும் சிறுவரடி அழகில் ஸுகுமாரரடி
அரசன்பெற்ற அருமைமகன் அரதனுசைத் திறமையுடன் என்
2 பங்கயமாயிந்த வில்லைத் தந்தை வைத்ததென்ன தொல்லை
பங்கயக்கண்ணன் பச்சைநிறத்தோன் சங்கரன் வில்லை
செங்கைத்தலத்தால் என்

3 எந்தன் மனங்குளிர்ந்திடவே தந்தை மனமகிழ்ந்திடவே
எடுத்துக்கையில் பிடித்துவில்லை ஒடித்து என் கை
பிடித்திட நான் என்

4 என்னையிவர் தெரிவாரோடி என் கவலை யறிவாரோடி
ஆரடி சொல்வர் அவரிடத்தில் நேரினில் சென்றென்
நெஞ்சமதை நான்

22-வது கட்டம்

தோழி ஸீதைக்கு ஸமாதானங்கூறல்

ராகம்-ஆ இதேன்ன புதுமை மெட்டு

பல்லவி

ஆ இதென்ன வருத்தம்
அரசன் ஜனகன்பெற்ற அருமைத் திருமகளே ஆ

அநுபல்லவி

தீர ரகுகுல கெம்பீரா சிவதனுஸைத்
திறமுடனே யெடுப்பர் விரைவினிலே யொடிப்பர் ஆ

சரணம்

1 மனமது களித்திருப்பாய் இந்த மன்னர் திறமதை
மகிழ்வுடன் பார்த்திருப்பாய்
கனக கமலமுக வனஜ நயனியுன்னை
மனுகுலதிலகரும் மணம்புரிந்து மகிழ்வர் ஆ

23-வது கட்டம்

ஸீதையின் ஸ்வயம்வர வைபவத்தைக் கேட்டு லங்கை ராவணன்
ஓடிவந்து சபையில் சொல்லுதல்.

ராகம்-சிட்டான் துநவி மெட்டு

1 ராவணன் ஸபையில் வந்து நின்றான் வெகு
ஆவலாய் ஜனகன்முன் புகன்றான்

2 வில்லு என்னொருவனுக்காணுமோ இதை
எடுக்கவு மித்தனைபேர் வேணுமோ

3 சுண்டுவிரலாலிதனை யெடுப்பேன் சிறு
துண்டு துண்டாக வொடித்துக் கொடுப்பேன்

4 கைலேமலே தூக்கியவன் நானே என்
கைவலுவைப்பாருமே நீர் தானே

5 என்று சொல்லி வில்லேக்கையி லெடுத்தான் கீழே
இருபது கைகளேயும் கொடுத்தான்

6 வில்லே மல்லுக்கட்டித் தூக்கி விழுந்தான் மார்பில்
விழுந்துமே லழுத்திடப் பறந்தான்

7 பத்துவாயினுலுங் கத்தி யழுதான் மிகப்
பார்த்து ஜனகரையுந் தொழுதான்

8 வேந்தன் ஜனகருமிதைத் தெரிந்தார் இவனே
விடுவிக்க உத்திரவு புரிந்தார்.

24-வது கட்டம்

ராவணன் வில்லேத்தூக்கித் தன் மீதில் போட்டுக்கொண்டு
வெட்கங்கொண்டு லங்கைக்கு ஓடிவிடுதல்.

ராகம்-ஆண்டிப்பண்டாரம் மெட்டு

பல்லவி

ஓடிச்சென்றுனே இலங்கை
கூடி நின்றுனே.

சரணங்கள்

1 சேர்ந்து பல கிங்கிலியர் சிவதனுஸைத் தூக்கிவிட
சோர்ந்து மிக ராவணனும் சொல்லாமல் நில்லாமல் ஓடி

2 பட்ட பெருங் காயங்களேத் தொட்டுக் கையால் தடவிக்கொண்டு
நட்டுத் தலேகவிழ்ந்து நாணி வெகு வேகமுடன் ஓடி

3 மூக்கிக்கொண்டு வாயில் ரத்தம் கக்கிக்கொண்டு தான் மிகவும்
துக்கங்கொண்டு வெட்கமுடன் நிற்காமல் ஓடியோடி ஓடி

4 கூட்டிடாமல் யாருந்தன்னேக் கேட்டிடாமல் புண்கள் தனேக்
காட்டிடாமல் மூடிக்கொண்டு ஓட்டமாக ஓடியோடி ஓடி

25-வது கட்டம்

ராவணன் லங்கை சென்ற பின்பு ஸ்ரீராகவன் மாடியின்மேல் நின்ற ஸீதையைக்கண்டு மோகமுறுதல்.

ராகம்-தெம்மாங்கு சிந்து

பத்துத்தலை ராவணனுங் கத்திலங்கை சென்றபின்பு
சித்திடை நம்ஜானகியும் சேர்ந்துமவள் தங்கையுடன்
சேடியுடன் தான் நடந்து மாடியின்மேல் ஜன்னலண்டை
கோடி சூர்யகாந்திமின்ன காடிநின்று பாரப்பதனைக்
கண்டார் மகிழ்வுடன் கல்யாண ராமச்சந்திரன்
விண்டார் தம்பியென்னும் இளையலக்ஷ்மணனிடம் கண்

26-வது கட்டம்

ஸ்ரீராமர் லக்ஷ்மணனிடம் ஸீதாதேவியை வருணிப்பது

ராகம்-அம்பா மதுரை மீனாக்ஷி மெட்டு

1 ஆ தம்பி லக்ஷ்மணனே பாராய் இளங்
மைதயலிவளழகை நேராய்
தங்கநிறமுடையாள் அங்கவடிவுடையாள்
இங்கித நல்விழியாள் இன்னமுதமொழியாள் தம்

2 இவள் தானோ ஜனகன் தன்குமாரி என்
மனதிற்கிசைந்த ஸுகுமாரி
அன்னமொத்த நடையாள் மின்னலொத்தயிடையாள்
என்னமெத்த ஜாடையாய் என்னமோகன பார்க்கிறான் தம்

3 சிறு மங்கை இந்தப்பெண்மணி ஸீதை என்
மனதைக் கவர்ந்தன ளிப்போதே
மாடியினில் வந்து மேடியுடன் நின்று
சேடியுடன் கூடி வேடிக்கை பார்க்கிறாள் தம

4 அதி உன்னத வடிவுள்ள மாது இந்த
உலகத்தில் இவளைப்போலேது
உத்தமியிம்மானே சித்தமதில் யானே
பத்தினியாய்த்தானே பதித்திருக்கேனே தம

27-வது கட்டம்

ஜனகராஜன் மந்திரிகள் ஸபையில் வந்திருக்கும் மன்னர்களை வில்வளைக்கும்படி சொல்ல அவர்கள் பதில் சொல்வது.

ராகம்-புவனசுந்திரா மெட்டு

1 சிவதனுஸெடுப்பீர் ஸிந்துராஜனே
ஸீதை தன்னை நீர் மணம்புரிந்திடலாம்
கவலையென்ன யானிருக்க எவர் வரவேணும்
காலில் முள்ளுதைத்துக் கடுக்குதுங்காணும்

2 மகதராஜனு பஹீபசூரனு
சிவனுசாபமு ஸொல்பகொடிரீ
ஜனகாவரு ஹெத்ரபந்து நன்குஹேளீரோ
ஸீதா கிக்கம்ம யேனுமாடிரோ

3 அங்கராஜனே இங்கே வாருமே
சங்கரதனுஸை சற்றுப்பாருமே
இங்கில் யானும் வருகும் வேளை சகுனமில்லையே
ஏதோ வில்லெடுக்க மனமும் வல்லையே

4 போஜராஜ ஈ ராசதோனுயி
யீசசாபமு ஸஞ்சுகோவலா
யீஸமயமு மாகுபெண்டிலி யவஸரங்காதே
யேமோஜாத முலோ குருபலம் லேதே.

28-வது கட்டம்

எல்லா அரசர்களும் ஒன்றுகூடி ஸபையில் சொல்வது.

ராகம்-அய்யா முருகேசா மெட்டு.

1 வந்திருந்த ராஜரெல்லாம் வகைவகையாய்ப் போக்குச் சொல்லி
மந்திரியைக்கூவியப்போ மன்னரெல்லாஞ் சொல்லுகிறார்.

நல்லது போங்காணும்
வில்லெதற்கு வேணும

2 கல்யாணமென்று சொல்லி கடிதமதைத் தானெழுதி
எல்லவரைத் தானழைத்து யேதுக்கிந்த வம்பு செய்தீர் நல்ல

3 தொட்டுவிட்டால் தோள்கடுக்கும் தூக்கிவிட்டால் மாறடைக்கும்
எட்டியிதைத் தான்வளைக்க ஈசனுக்கும் கை நடுக்கும் நல்ல

4 சொல்லுமுங்கள் பெண்வேண்டாம் தோர்புடனே ஜயம்வேண்டாம்
அல்லதெங்கள் உயிரிருந்தால் ஆயிரம்பெண்தேடிக்கொள்வோம் நல்ல

29-வது கட்டம்

ஸ்ரீராகவனை விச்வாமித்திரர் வில்லெடுக்கும்படி சொல்வது.

கும்மி—மெட்டு

1 என்று சொல்லி வந்த மன்னரெல்லாம்
எழுந்திருந்தவர் போகக்கண்டு
மந்தஹாஸத்துடன் ராகவனும்
மாமுனிவரை நோக்கலுற்றார்

2 கோசலை பாலகன் கண்ணினையின்
குறிப்பை நன்றாய்த்தானறிந்து
ஆசையுடனந்த விச்வாமித்திரர்
ஆனந்தமாகவே சொல்லுகின்றார்

3 மங்களமுண்டாகு முந்தனுக்கு
மரகதவண்ணா ராமச்சந்திரா
சங்கரன் வில்லிதை நீருமெடுத்திப்போ
சந்தோஷமாக வளையுமென்றார்

4 தவமுனியவர் சொன்ன பின்பு
தாசரதியந்த ராகவனும்
மகிழ்வுடனே தனியினருகினில்
மத்தகஜம் போல் நடந்து வந்தார்.

30-வது கட்டம்

ஸ்ரீராமர் வில்லை எடுப்பது.

ராகம்-ஸ்ரீநுஜாவே மெட்டு

1 பச்சை நிறத்தொளி வீச அங்கு
பார்த்தவர் மனங்கூச அதி
பாலசுந்திர ராமசந்திர பார்த்திபேந்திரனெழுந்தார்

2 கோடி திவாகரன் கூடிப் பெருங்
கூட்டமதாகவே காடி இந்தக்
கொலுமண்டபத்தில் வந்ததென்று கொண்டாடினர் பலர்கூடி

2 மாணிக்க மண்டபந் தன்னில் அந்த
மன்னாதி மன்னர்கள் முன்னில் உயர்
மத்தகஜத்தைப்போல் நடந்து உத்தமனங்கு வந்தார்

3 வேந்தன் ஜனகன் பார்க்க வேறு
வேந்தர்கள் மனம் வேர்க்க விஜய
கோதண்டராமன் மலர்போல் வில்லைக்கரத்திலெடுத்தார்.

31-வது கட்டம்.

ஸ்ரீராமர் வில் ஒடிப்பது.

ராகம்-சோந்த சதுனிமாமா மெட்டு

1 வில்லைக்கையில் தூக்கினார் வீரதீர ராகவன்
வேந்தன் ஜனகன் காணவே வேறுமன்னர் காணவே வில்

2 தனுஸினை வளைத்திட்டார் தரணிமன்னர் தலையுடன்
நாணைகையிழுத்திட்டார் நங்கை ஸீதை மனதுடன் வில்

3 விரைவினிலே வில்லிரண்டா யொடியவே
புவனிதன்னில் விழுகவே பெரியசத்தங் கேட்கவே வில்

4 மோகங்கொண்டு மன்னர்கள் மூர்ச்சையாகிவிழுகவே
வேகமாக விண்ணவர் புஷ்பமாரி பொழியவே வில்

5 மன்னன் ஜனகராஜனும் மனமகிழ்ந்து நாடவே
கன்னி ஸீதை யோடிவந்து புஷ்பமாலை போடவே வில்

6 அஷ்டதேச வாத்தியங்கள் அழகதாய் முழங்கவே
எட்டுதிக்கும் புகழவே எல்லவரும் மகிழவே வில்

32-வது கட்டம்

ஸ்ரீஜனகராஜன் தசரத மஹாராஜரை உபசரித்து அழைத்து வருவது.

ராகம்-நின்றதோரு பாலகனே மெட்டு

1 மன்னன் ஜனகராஜன் மகிழ்வுடன் மந்திரிகள் தனையனுப்பி
உன்னிதமாய் மிகப்புகழ்ந்து தசரதரை உபசரித்தழைத்து
வந்தார்

2 பரதசத்ருக்னருடன் பக்ஷமுள்ள பாரியர் தங்களுடன்
அளவற்ற சேனையுடன் மிதிலேநகர் ஆசையுடன்வந்தகந்தார்

3 எதிரழைத்துபசரித்து தசரதரை யேற்றமுள்ள ஜனகரப்போ
மதிமகிழ்ந்தன்புடனே தசரதர்முன் மங்களமாய்ச்
சொல்லுகின்றார்

4 வில்லினையுமுறித்துவிட்டாரும்முடையவிஜயகோதண்டராமன்
கல்யாணி ஜானகியை சுபதினத்தில் கல்யாணம் செய்து
கொள்வார்

5 எந்தனுட புத்திரியாம் ஊர்மிளையைலக்ஷ்மணர்க்குதந்திடுவேன்
மந்தஹாஸமதிவதனி தம்பியின்பெண் மாண்ட விசிருத
கீர்த்தியை

6 பரதசத்துருகனருக்கும் திருமணம் பண்ணிக்கொள்ள
வேண்டுமென்று
பெருமையாய் தசரதர்முன் ஜனகரும் பிரியமாய் வேண்டி
நின்றார்

7 மங்களவசனங்கேட்டு தசரதர் மனமிக மகிழ்ந்து கொண்டு
எங்களுக்கு முங்களுக்கும் ஸம்மந்தம் இசைந்ததென்பாக்ய
மென்பார்

8 கோசிகர் வஸிஷ்டருடன் ஜாபாலி காசிபர் ஸதானந்தரும்
ஆசிகளைக்கூறிக்கொண்டு சோபன அக்ஷதைகள் வழங்கிக்
கொண்டார்.

33-வது கட்டம்

ஸ்ரீராமலக்ஷ்மண பரதசத்ருக்னரை ஜனகராஜன் எதிரழைத்துவருவது

ராகம்-தாரதில்லானு மெட்டு

1 மன்னவன் ஜனகரும் மனமகிழ்ந்தார்
மாப்பிள்ளைகளை எதிரழைத்துவந்தார்
பொன்னகரைப் பழிக்கும் நன்னகர் மிதிலையில்
மன்னியவீதிகள் தன்னிலுகந்து
உன்னிதவாத்தியமுழங்கிடவே உம்பர்கள் முனிவர் கொண்
டாடிடவே மன்

2 அதிபதி தசரதர் ஆனந்திக்க
அகிலத்தோரனைவரும் மனங்களிக்க
ரதகஜதுரகபதாதிகள் கூடவே
மதிதலராஜர்கள் மகிழ்ந்து கொண்டாடவே
ததிபெருமிதிலையின் வீதியிலே விதவிதவாத்ய முழங்கிடவே மன்

3 மத்தாப்பு வாணங்கள் துலங்கிவர
மகத்துக்களனைவரும் நெருங்கிவர
பத்தினி கௌசலை பெற்றகுமாரனை
பார்புகழ் தீரனை ஸ்ரீரகுவீரனை
உத்தமமான முகூர்த்தமதில் உல்லாசத்துடனுபசரித்து மன்

4 பூரித்து விண்ணவர் மனங்களிக்க
பூமலர்மாரிகள் மகிழ்ந்திறைக்க
நேரிழைமாதர் அரம்பையராடவே
நேர்த்தியதாகவே கின்னரர் பாடவே
ஆரத்திகொண்டு சுமங்கலிகள் அழகுடன் பாடியே சுற்றிவர மன்

34-வது கட்டம்

மிதிலையிலுள்ளவர் ஸ்ரீராகவனை வருணிப்பது

ராகம்-தன்முகத்துச்சுட்டி மெட்டு

1 பூமிபுகழும் மிதிலைத் தெருக்களில் கூடி ஸ்ரீ
ராமலக்ஷ்மண பரதசத்ருக்னரை நாடி

2 கூட்டங்கூட்டமா யோட்டமா யோடிவந்தார் விதி
கோதண்டராமனைக் கண்டுமகிழ்ந்து புகழ்ந்தார்

3 ஸ்ரீகள் பூமான்களனைவருந்தன்னை மறந்தார் நம்
ஸ்ரீராமச்சந்திரன் மேலர்வையைத் தேடிப்பறந்தார்

4 பட்டத்து ராணிகள் பிரபுக்கள் தேவிகள் பார்த்தார் உயர்
பச்சைவண்ணனிடம் தங்கள் மனந்தனை சேர்த்தார்

5 பாரடி பாரடி பாக்கியமேயடி என்றாள் சிலர்
பாரடி கூரடி என்றுமே மூர்ச்சித்து நின்றாள்

6 ஆழிவண்ணனே அனங்கனே அன்பனே யேடி அடி
தோழியே சீக்கிரமோடியே கூடியே வாடி.

35-வது கட்டம்

ராகம்-கேசவழாரோ ஸ்ரீ மெட்டு

பல்லவி

தோழியரே யோடியிங்கே வாருங்கோடி சேருங்கோடி
துரைஜனகர் மாப்பிள்ளையை மகிழ்வுடனே பாருங்கோடிய தோ

சரணங்கள்

1 ஆழிநிற வண்ணனடி அம்புயம்போல் கண்ணனடி
அழகிய நம் ஜானகிக்கு ஆசை மணவாளனடி தோ

2 புகழ்மிகுந்த கௌஸலையின் புத்திரராம் உத்தமராம்
அகமகிழ்ந்து கௌஸிகரின் யாகமதைக் காத்தவராம் தோ

3 கல்லையும் பெண்ணாக்கிவைத்த சுண்ணியராம் புண்ணியராம்
வில்லையும் துண்டாய் முறித்த வீரதீர ராகவராம் தோ

4 மன்னனிந்த ராகவனை மைதலியும் மாலையிட
என்ன புண்யஞ்செய்தனளோ எல்லவரும் கூறுங்கோடி தோ

36-வது கட்டம்.

ஸ்ரீ ஸீதாதேவியும் ராகவனும் மாலை மாற்றுவது

ராகம்-ஆயர் மனையில் மெட்டு

பல்லவி

மாலை சாற்றி மாலை மாற்றி மகிழ்ந்தனள் ஸீதை பூமலர்

அநுபல்லவி,

பாலையுவதி ஜானகிவெகு பாங்குடன் ரகுராகவனுடன் மா

சரணங்கள்

1 ஜாதிமல்லிகை முல்லை ரோஜா சண்பகம் வகுளம்
சம்பங்கி குருவேர் கொழுந்துடன் சாமந்தி துளவம்
பாதிரிமரு புன்னையரளி பன்னீர்சுகந்த பரிமள மலர் மா

2 அஷ்ட தேச வாத்யமுழங்க அமரர் கொண்டாட
அகிலஜனங்கள் யாவரும் வந்து அங்கினில்கூட
இஷ்டமுடைய தசரதருடன் ராஜன் ஜனகர் மகிழ்ந்துகொண்டாட மா

37-வது கட்டம்

ஊஞ்சல்-ராகம்-பைரவி

1 நவரத்னக்கால் நிறைந்த பந்தல் நீழல்
நல் வைரமணிழைத்த ஊஞ்சல்மீதே
புவனிகளிலவதரித்த மங்கை ஸீதை
புகள்பெரும ஸ்ரீராகவனே டாடிரூஞ்சல்

2 இந்திரனும் சசியுமொரு வடந்தொட்டாட்ட
ஈசனுட னுமையுமொரு வடந்தொட்டாட்ட
சந்திரனும் ரவியும் வெண்சாமறைகள் போட
ஜானகியும் ராமனுடன் ஆடிரூஞ்சல்

3 மன்மதனும் ரதியுமொரு வடந்தொட்டாட்ட
மலரயனும் வாணியமோர் வடந்தொட்டாட்ட
இன்னிசையாய் மாதர் பலர் கீதம்பாட
ரகுநாதன் ஸீதையுடன் ஆடிரூஞ்சல்

4 கௌசலையும் தசரதரும் குளிர்ந்து நோக்க
களிப்புடனே ஜனகமன்னன் மகிழ்ந்து பார்க்க
கேசிகரும் வஸிஷ்டருங் கொண்டாடி யேர்க்க
காகுஸ்தன் மைதிலியோடாடி ரூஞ்சல்.

38-வது கட்டம்

ஸாதாரண லாலி

1 கந்தமலர் மீதுறையுங் கட்டழகி ஸீதை
இந்துமுக சுந்திர ஸ்ரீராமன் மகிழகோதை — லாலி

2 கௌசலை குமாரனே ஓ கல்யாண ராமா
கௌசிகரின் வேள்விதனை காத்த பரந்தாமா — லாலி

3 கல்லையும் பெண்ணாக்கிவைத்த கமலமலர்ப்பாதா
தொல்லுலகில் கீர்த்திமிகும் துரையே ரகுநாதா — லாலி

4 சிவதனுவை முறித்துகந்த சீர்மிகுந்த தோளா
புவனிபுகழ் ஜனகன்பெற்ற ஸீதை மணவாளா — லாலி

39-வது கட்டம்

லாலி

1 அவனியிலுதித்த மானே ஸ்ரீராகவன்
முகமலர் பொருந்துதேனே
அகவினையில் நொந்து நானே போற்றினேன்
அருள் செய்யிகழாமல் தானே

2 ஜனகேந்திரன் பெற்ற ஸீதே ரகுவீரன்
சித்தமதுகந்த கோதே
உனதடிமை நான் தப்பாதே எந்தனை
ஒருபோதுங் கைவிடாதே.

40-வது கட்டம்

ராகம்-கோபி கோபால பாலா மெட்டு

பல்லவி

லாலி ஸ்ரீராமச்சந்திர லாலி ரகு வரேந்திரா

சரணங்கள்

1 லாலி தசரதேந்திரபுத்ரா லாலி ஸுகுணசீலா மித்ரா
லாலி ஜானகி களத்ரா லாலி ராமபத்ரா லாலி

2 லாலி நீலமேகசியாமா லாலி ரவிகுலாப்தி ஸோமா
லாலி ஸ்ரீரகுராமா ராமா லாலி ஸ்ரீ பரந்தாமா. லாலி

41-வது கட்டம்

ராகம்-கல்யாணி தேவிமீனாக்ஷி

பல்லவி

தேவி ஸ்ரீஜானகிதன்னைத் திருமணம்புரிந்தார் ஸ்ரீ

அனுபல்லவி

பாவன சுகுமாரசுந்திரன் பச்சைமேனி ராமச்சந்திரன்
பாங்காய் சபவேளைதனிலே பார்த்திபன் ஜனகேந்திரன் புதல்வி

கோகில மிருதுஸ்வரவாணி
கோமள தருணி கல்யாணி
ஆகம விநுத புராணி
அற்புத குணகண பூஷணி தேவி ஸ்ரீ

சரணங்கள்

1 அகிலதேசவாத்தியம் முழங்க அந்தணர்கள் நெருங்க
மகிழ்வாகவே வஸிஷ்டரும் சுபமந்திரம் வழங்க
அகமகிழ்வுடன் தசரதர் வெகு ஆனந்தமாய்க் களிக்க
அன்பாகவே பூரிதக்ஷிணை ஆசையோடனைவருக்குமளிக்க

பூமகளாகிய ஸீதையை
பூபதியாகிய ஜனகரும்
தாமரைக்கண்ணன் ஸ்ரீராமர்க்கு
தாரைநீர் வார்த்து மகிழ்ந்திட — தேவி ஸ்ரீ

2 அம்பரந்தனில் தேவர்புகழ அயனான் கண்டுமகிழ
ஆனந்தமாய் கந்தருவர்கள் புஷ்பமாரிபொழிய
உம்பர்முனிவர் திகழ்ந்துகூட தும்புருநாரதரும் பாட
ரம்பாதியர் வினயமோடதி ஸம்பிரமமாய் நடனமாட

ஜகமதிலுள்ளவர் கூட
ஜானகி ராமனை நாட
மகிழ்வுடன் கூடிக்கொண் டாட
மங்கையர் சோபனம்பாட — தேவி ஸ்ரீ

42-வது கட்டம்

ராகம்-கோபுர தரிசனம் மெட்டு.

பல்லவி ஸ்ரீராகம்

ஸ்ரீங்கார அற்புதமென்னு சொல்வேன்
ஸீதாராமகல்யாண வைபவமதின் — ஸ்ரீ

அனுபல்லவி

1 மங்களமாகவே குஜத்வஜர் பெண்மணி
மாண்டவியை பரதர் மணம்புரிந்து மகிழ்ந்த — ஸ்ரீ

2 பக்ஷமதாகவே யூர்மிளை தேவியைப்
பாங்குடன் லக்ஷ்மணர் பாணிக்கிரஹணம் செய்த — ஸ்ரீ

3 சுந்திரவதி ஸ்ரீ தகீர்த்தியை சத்ருக்னர்
விந்தையாகவே விவாஹம் புரிந்திட்ட — ஸ்ரீ

4 அழகிய தாம்பூலகந்த மணிந்ததி
ஆனந்தமாகவே யகிலரும் புகழ்திட்ட ஸ்ரீ

43-வது கட்டம்

ராகம்-சங்கராபரணம்

பல்லவி

ஸீதா கல்யாணம் வைபவமே

சரணங்கள்

1 வேதாந்தவிதிவினுத விமல கல்யாணி
வீரகோதண்ட ஸ்ரீரகுவீர ராணி ஸீதா
2 ஜகதேக காரணி ஜலஜதள நயனி
ஜனகராஜ குமாரி ஸ்ரீராமபத்தினி ஸீதா

44-வது கட்டம்

ராகம்-மஜதாரி யென்னும் ஹிந்துஸ்தானி மெட்டு

பல்லவி

ரகுவீரா கம்பீரா நலுங்கிடரா ரகு

சரணங்கள்

1 பிகுவதோரா ராராதிரா பிலுவபிலுவ ஸாந்திரா
பிரியகாந்தலேச்சிரா நா பிரியகாந்தலேச்சிரா ரகு
2 பார்த்திபேந்திரா ராமச்சந்திரா பத்மவதன பாவன
பிராணநாதா லேச்சிரா நா பிராணநாதா லேச்சிரா ரகு

45-வது கட்டம்

ராகம்-சஹானு

பல்லவி

பச்சைவண்ணனே எந்தன் பிராணபதியே யுந்தன்
பாதத்தில் கலங்கிடுவேன்

அனுபல்லவி

அச்சுதனே எந்தன் அந்தரங்கத்துரையே
அரனயன் பணிந்திடும் அமலபொற்தாளனே பச்

சரணம்

1 கௌசல்லைபாலனே கதிர்குலசேர்மனே
கல்யாண ராகவனே
கௌசிகன் வேள்வியைக் காத்த கம்பீரனே
கல்லைப்பெண்ணாக்கிய கமலப்பொற்பாதனே பச்

46-வது கட்டம்

ராகம்-கலிலோ மெட்டு

பல்லவி

மனமோஹன ஸுந்திர ராமா
மணமிகும் சந்தனம் பூசி மகிழுவேன் மன

அனுபல்லவி,

புனுகத்தர் பன்னீர் பரிபள வீச
பூசுவேன் ஆசையாய் நேசனே பாருமென் மன

சரணம்

ரகுவம்சகுலாதிபா சுந்திர கருணை நின் திருமுடியில்
லொகுஸாகவே மல்லிகைஜாதி ஸுகந்தாமாமலர்
சூட்டுவேன் பாருமென் மன

47-வது கட்டம்

ராகம்-எஜிபன மோஹன மெட்டு

பல்லவி

ஜானகிதேவி வெண்சாமரம் வீசினள்
ஆனந்தமாகவே அம்புயகரத்தினல் ஜா

சரணங்கள்

1 கோசலை பாலகன் கோமள மேனியில்
வாசனை வீசவே வெட்டிவேர் விசிரியால்
2 கங்கணம் வங்கியின் காந்திகள் மின்னவே
சிங்காரமாகவே ஸ்ரீரகுநாதன் முன்பாய் ஜா

48-வது கட்டம்.

ராகம்-பாலாபிஷேகம் மெட்டு

பல்லவி

கண்ணுடிபாருமே கல்யாணராமனே காகுஸ்தனே கருணகரனே
மண்ணவர் விண்ணவர்யெண்ணியே நண்ணும்
மாமலர்க் கண்ண சாமளவண்ண

சரணம்

வீராதி வீரா ஒ தீரா கெம்பீரா
வேந்தர் சிகாமணியே சுகுமாரா
கல்லைப்பெண்ணுக்கிய கமலபொற்பாதா
வில்லைத்துண்டாக்கிய விமலப்பிரக்யாதா
பூமா நேமா ஸ்ரீபரந்தாமா
கோமள சந்திர ஸ்ரீரகுராமா கண்ணுடி

49-வது கட்டம்

ராகம்-பத்யம், ஆனந்தபைரவி

பாற்கடல் தன்னிலே பாம்பணை மீதிலே
பள்ளிகொள்கின்ற ஸுகமதை மறந்தீர்
தீர்க்கவே தேவர்குறை போக்கவே புவனியில்
தசரதர் மைந்தனய் வந்துதித்தீர்
கார்க்கடல் வண்ணனே கௌசிகர் வேள்வியை
கானகந்தனில் வந்து பார்த்தூகந்தீர்

கருணையுடன் மிதிலைநகர் நாடிவந்தீர்
கல்லையும் பெண்ணாக்கி மனமகிழ்ந்தீர்
அரதனுசை கொடியிலொடித்தெறிந்தீர்
அன்புடைய நாதனே அடிமலர் தண்டனிடுரேன்

50-வது கட்டம்.

மங்களம்

தசரதபாலனே தீனனுகூலனே
திசையெங்கும் புகழ்பெற்ற தயசீலனே
சசிரவிநயனனே ஸாரஸவதனனே
ஸத்குண விஜயஸ்ரீ ஸாகேதராமா
மங்களம் ஜயவிஜய ஸ்ரீராமா மங்களம்.

51-வது கட்டம்

ராகம்-தோடி ஸரஸதள நேத்ரனே மெட்டு

பல்லவி

நீரஜ தளநயனி சேர்த்தியாய் நலங்கிடுவேன்
நித்யமங்கள கல்யாணி நீரஜ

சரணங்கள்

1 பார்தனில் வந்துதித்த பத்தினியே உத்தமியே
பார்த்திபன் ஜனகன் பெற்ற கபன்னின்மணியே
காரணியே பூரணியே கண்மணியே யானுனக்கு
காதலாய் நலங்கிடுவே பாதமலர் தந்திடுவாய் நீரஜ

2 சந்தனம் பூசுனேனெந்தன் ஜானகியுனக்கழகாய்
சம்பங்கி மல்லிகைமுல்லை மலர் சூட்டுவேன்
அந்தமுடன் பொட்டிடுவேன் அற்புதக்கண்ணாடியிதில்
அன்னநடைமின்னரசே யுன்னழகைப் பார்த்தருளென் நீரஜ

52-வது கட்டம்

பத்யம் ராகம்-எதுகுல காம்போதி

ஜனகராஜகுமாரி ஸரஸகுண சுந்தரி
ஸிங்கார பரிபூர்ண சந்திரவதனி
கனகமாயபூஷணி யமிருதமிருதுபாஷணி
கருணாகடாக்ஷிநீ கமலநயனி
வனஜமலர் வாஸி நீ வைபோககாரணி
வாஸவார்ச்சிதவந்திய விமலசரணி

உனது ஸௌந்தர்யமதை நாடி மிதிலைவந்தேன்
உள்ள மகிழ்வுடன் சிவதனுஸொடித்துவந்தேன்
எனது கண்மணி தாம்பூல புஷ்பம் தந்தேன்
இன்பமுடன் வாங்குவாய் அன்புடைய அமிருதரஸமே

53-வது கட்டம்

ராகம்-கேதாரம் வாஸவன் முன்மெட்டு

பல்லவி

பந்துகந்து மகிழ்ந்து ஆடினாள்

அனுபல்லவி

பச்சை நிறவண்ணனுடன் பிச்சி முல்லை மல்லிகைப்பூப் பந்து

சரணங்கள்

1 கோமளமுடைய தாமரைவனர் பூ
மாதுஜனகன் பெண் ஸீதை மகிழ்வுடன்
பூமி புகழ்ந்திடும் ஸாமி ஸ்ரீரகு
ராமனுட னதிப்பிரேமையுடன் மலர்ப் பந்து

2 பொன்னின் நிறவொளி மின்னுபிடியிடை
அன்னமெனும் நடைக்கன்னல்மொழியா
மன்னமணிமுடி துன்னும் ரவிகுல
மன்னன் ராகவன் தன்னுடனே மலர்ப் பந்து

54-வது கட்டம்

மங்களம்-ராகம்-நாதபீந்து, திருப்புகழ் மெட்டு

1 மங்களம் ஜய ஸார்வ பௌமனே
மங்களம் ஸீதாபி ராமனே
மங்களம் சுபமங்களம் ஜய ரகு ராமா

2 மங்களம் ஜானகி ஸமேதனே
மங்களம் ரகுவம்ச நாதனே
மங்களம் ஜயமங்களம் சுப வர நாமா

3 மங்களம் கோஸலை குமாரனே
மங்களம் குணிசீல தீரனே
மங்களம் ஜயஜானகி மனோஹர லோகாமா

4 ரங்கநகர நிவாஸனே ஸ்ரீ
ரங்கநாயகி நேசனே சுப
மங்களம் ரங்கராஜனே யருள் பரந்தாமா.

55-வது கட்டம்

கதவுத் திறக்கிற பாட்டு

கண்ணிகள்

1 கட்டழகியே எந்தன் காதலி ஜானகியே
எட்டநிற்பதென்னடி பெண்ணே எந்தன்
கிட்டவந்து சொல்லடி கண்ணே

2 கிட்டவந் துரைக்கயான் கமலநவ ரத்தினக்
கல்லிழைத்த நகைகள் தானே வெகு
காக்ஷிபோ டணிந்திருக் கேனே

3 அணிந்த பணிகளுடன் அருகில் வாராமல் நிற்கும்
ஆலோசனை என்ன சொல்வாயே யானும்
அறிந்துகொள்ளவே ஸீதை நீயே

4 அறிவேன் கருங்கல் உமதடிமலர் தூளிபட்டு
அழகிய பெண்ணதாய்ப் போச்சுதே எந்தன்
ஆபரணம் ரத்னக்கல்லாச்சுதே.

5 ரத்ன நகையணிந்து பர்த்தாவிடத்தில் வந்தால்
அத்தினையும் பெண்ணுருவாகுமோ உந்தன்
புத்தியிலு மிதென்னப் போகுமோ

6 எண்ணமுறைத்திடுவேன் எந்தனை விட்டு மறு
பெண்மணி களாரிருங் காணுமே நெஞ்சில்
எண்ணும விருந்திட வேணுமே

7 என்னுவே னொருகண்ணை ராஜன் ஜனகன்பெண்ணை
இன்பமுடைய ஒரு மாதையே நெஞ்சில்
எந்தப்பொழுதுமடி ஸீதையே

8 ஸீதை யடியவன் யான் செய்தபிழை பொறுத்து
சிந்தை மகிழ்ந்தருளும் நாதனே யும்மை
ஸேவித்தேன் கமல பொற்பாதனே.

56-வது கட்டம்

ராகம்-பூபாளம், உதயராகம்

1 தேவானுகூலா ஓ தேவி கோசலைபாலா
தசரதராமனே எழுந்திரும்
ஆவலோடழைத்திட்ட கோசிகன் வேள்வியை
அன்புடன் காத்தோனே எழுந்திரும்

2 கல்லைப்பெண்ணாக்கிய கமலபொற்பாதனே
கல்யாண ராகவா எழுந்திரும்
வில்லொடித்து மிதிலை வேந்தன் பெண் ஸீதையை
விவாஹஞ் செய்துகந்தோனே எழுந்திரும்

3 அட்டகாசமாய் வந்த பரசுராமனையோட்டி
அயோத்தி வந்த துரையே எழுந்திரும்
தட்டாமல் தந்தைமொழி தம்பி ஸீதையுடனே
தண்டகாரண்யம் சென்றுயெழுந்திரும்

4 சித்தமகிழ்வுடனே குகனைத்தோழமை கொண்டு
சித்ரகூடமே வந்தாயெழுந்திரும்
பக்தியுடனழைத்த பரதர்க்கு மகிழ்வுடன்
பாதுகமளித்தோனே யெழுந்திரும்

5 மூர்க்கன் விராதனைக் கொன்ற சூர்ப்பணகையின்
மூக்கரிந் துகந்தோனே யெழுந்திரும்
கார்க்க வந்தெதிர்த்திட்ட கரதூஷணை ஜயித்து
கபந்தனை வதைத்தோனே எழுந்திரும்

6 வந்த மாருதியுடன் சென்றுசுக்ரீவனுக்காய்
வாலியைக்கொன்றவனே எழுந்திரும்
அந்தரங்கத்துடனே அனுமானைத் தூதாக
அனுப்பி மகிழ்தவனே எழுந்திரும்

7 அரக்கன் விபிஷணர்க் கபயங்கொடுத்து கடல்
அணைபாலக்கரை சென்று யெழுந்திரும்
வருக்கத்துடனே வந்து எதிர்த்த இராவணனைத்தன்
வம்சத்தோடழித்திட்டா யெழுந்திரும்

8 தசமுகனை வதைத்து தேவி ஜானகியுடன்
திருவுளமகிழ்ந்தோனே யெழுந்திரும்
திசையெங்கும் புகழவே புஷ்பரதமேறியே
திருவயோத்தியில் வந்தாயெழுந்திரும்

9 மன்னுபுகழ் பரதன் மனமிக மகிழ்ந்திட
மகுடாபிஷேகங் கொண்டாயெழுந்திரும்
உன்னருள்பெற நாடுமடியாள் ரெங்கநாயகிக்
குதவி யருள வேண்டு மெழுந்திரும்

10 ஸாகேதராமனே ஸ்ரீபரந்தாமனே
ஜானகிநேசனே எழுந்திரும்
ஆகமவினுதனே அணியரங்கேசனே
அழகிய மணவாளா எழுந்திரும்.

ஸ்ரீஸீதா கல்யாணமென்னும்
ஜானகி ஸ்வயம்வரக் கும்மி
முற்றிற்று.

விளம்பரம்.

ஸ்ரீரங்கம் ரங்கநாயகி அம்மாள் இயற்றிய புஸ்தகங்கள்.

		ரூ. அ. பை.
துளஸி மஹாத்மிய கீர்த்தனை 1-க்கு	...	0—6—0
தொண்டரடிப்பொடியாழ்வார் சரித்திரகீர்த்தனை 1-க்கு		0—6—0
வத்ஸலா கல்யாணக்கும்மி 1-க்கு	...	0—5—0
ருக்மணி கல்யாணக்கும்மி	...	0—5—0
ஸத்ஸம்பிரதாய பஜனைப்பத்ததி	...	0—4—0
ஜனகாசரித்திரக்கும்மி என்னும் காகுஸியோடக்கும்மி 1-க்கு		0—3—6
கோதை பரிணயக்கும்மி 1-க்கு	...	0—3—0
கோபிகா வஸ்திராபஹரணக்கும்மி 1-க்கு	...	0—3—0
எக்ஞய பத்நிகள் சரித்திரக்கும்மி 1-க்கு	...	0—3—0
அநஸூயா சரித்திரக்கும்மி 1-க்கு	...	0—8—0
நம்மாழ்வார் சரித்திரக்கும்மி 1-க்கு	...	0—3—0
ஸ்ரீரங்கநாதன் பள்ளியறைக்கீர்த்தனை 1-க்கு	...	0—2—0
தொழூர்நூர் ஸ்வாமி கும்மி 1-க்கு	...	0—2—0
ஸ்ரீரங்கம் வழிநடைக்கும்மி 1-க்கு	...	0—1—6
சம்மங்கியேசல் 1-க்கு	...	0—1—0
நூற்றியெட்டுத் திருப்பதிக்கீர்த்தனை 1-க்கு	...	0-12—0
திருமங்கையாழ்வார் சரித்திரக்கும்மி 1-க்கு	...	0—4—0

இவைகள் வேண்டியவர்கள் ஸ்ரீரங்கம் வடக்குச்சித்திரவீதி 1149 1195 நெ. வீட்டில் பெற்றுக்கொள்ளலாம்.

வி. பி. மூலமாய் அனுப்பப்படும்.

அறிவிப்பு.

இதனால் ஸகலமானவர்களுக்கும் தெரிவிப்பது யாதெனில்:— மேல்கண்ட புஸ்தகங்கள் யாவும் ஸ்ரீரங்கம், ஷை ஸ்ரீரெங்கநாயகி அம்மாளால் இயற்றப்பட்டு காபிரைட் செய்யப்பட்டிருந்ததை ஷை ரெங்கநாயகி அம்மாளால் ஷை ஸ்ரீரெங்கம் வடக்குச்சித்திரவீதி 1195 நெ. வீட்டிலிருக்கும் ரெங்கநாயகியம்மாளுக்கு சகலசுதந்தரமும் கொடுத்துவிட்டபடியால் இதை இவர் அநுமதியில்லாமல் யாரேனும் எவ்விதத்திலாயினும் அச்சிடலாகாதென சட்டப்படிக்கு ரிஜிஸ்டர் காபிரைட் செய்யப்பட்டிருக்கிறது. ஆனதால் ஷையார் உத்திரவின்றி யாரேனும் அச்சிட்டால் அதினால் ஏற்படும் எவ்வித நஷ்டத்திற்கும் பாத்தியப்படநேரிடுமென்பதை அறியவும்.